செ.வெ.எண்.30 நாள்.12.04.2017

திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், திருவேங்கடத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 66 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், திருவேங்கடத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் சிறப்பு மனுநீதி நாள் முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.04.2017) நடைபெற்றது.

இம்முகாமில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை வேண்டி 160 மனுக்களையும், பட்டா மாற்றம் வேண்டி 30 மனுக்களையும், ஆக்கிரமிப்பு அகற்றல் 15 மனுக்களையும், வறட்சி நிவாரணம் வேண்டி 9 மனுக்களையும், குடும்ப அட்டை வேண்டி 16 மனுக்களையும், இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டி 9 மனுக்களையும், இதர மனுக்கள் 78 என மொத்தம் 317 மனுக்களை பெற்றுக் கொண்டார்கள்.

முகாமில், வருவாய்த் துறையின் மூலம் வீட்டுமனைப் பட்டாக்கள் 20 நபர்களுக்கும், முதியோர் உதவித் தொகை 4 நபர்களுக்கும், உழவர் அட்டை 4 நபர்களுக்கும், இயற்கை மரணம் உதவித் தொகை தலா ரூ.12,500/–வீதம் 9 நபர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் உலர் தீவனம் 10 நபர்களுக்கும், புல்கரணை 10 நபர்களுக்கும், தாது உப்புகள் 5 நபர்களுக்கும் என மொத்தம் 66 நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

கிராமப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குறைகளை களையவும், அரசுத் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் இதுபோன்ற மனுநீதி நாள் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு ஏழை,எளிய மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 100 யூனிட் மின்சாரம் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது. ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தில் 4 கிராம் வழங்கப்பட்டது. தற்போது 8 கிராமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மகப்பேறு நிதியுதவி ரூ.12 ஆயிரத்திலிருந்து ரூ.18 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. ஏழைப் பெண்களுக்கு ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஏழைப் பெண்களுக்கு வருமானம் கிடைப்பதுடன் தன்னம்பிக்கையூட்டும் திட்டமாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் 8 வகையான ஓய்வூதிய திட்டங்களின் கீழ் 88 ஆயிரம் நபர்களுக்கு மாதம் ரூ.1000/– வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதிய திட்டத்தில் தகுதியில்லாத நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, நீக்கப்பட்டுள்ளனர். தகுதியான நபர்கள் புதிதாக சேர்க்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 8,37,404 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். அதிக தூரம் உள்ள நியாயவிலைக் கடைகள் பிரிக்கப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் 90 பகுதிநேர நியாயவிலை கடைகள் திறக்கப்பட்டுள்ளது. மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையின் உத்தரவிற்கிணங்க சீமை கருவேல மரங்கள் வேருடன் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. தனியார் நிலங்களில் உள்ள சீமை கருவேல மரங்களை வேருடன் அகற்றிட தாங்களே முன்வர வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உலர் தீவனம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டமும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனுநீதி நாள் முகாமில் பெறப்பட்டுள்ள மனுக்கள் சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் பரிசீலிக்கப்பட்டு, விரைவில் தீர்வு செய்ய துறை அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களுக்கு அரசின் திட்டங்கள் விரைந்து சென்றடைய முனைப்புடன் செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

இம்முகாமில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திருமதி.தி.சாருஸ்ரீ,இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.விஜயலெட்சுமி, திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.இல.மைதிலி, வேளாண்மைத் துறை துணை இயக்குநர் (மத்திய அரசு திட்டம்) திரு.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், சங்கரன்கோவில் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், திருவேங்கடம் வட்டாட்சியர் திரு.ராசு, மண்டல துணை வட்டாட்சியர் திரு.செல்வகுமார், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் திரு.ஜேம்ஸ் செல்லத்துரை உள்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.